Registered as a News Paper

பக்கங்கள் 04

விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆனி 25 | 09 - 07 - 1992 | வியாழக்கிழமை | ஓசை 142

## மன்னார் மருத்துவ சேவை பெருமளவில் பாதிப்பு

மன்னார் மாவட்டத்தின் மருத்துவ சேவைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. தேவையான அளவு மருந்துப் பொருள்கள் இம்மாவட்டத்திற்கு வந்து சேருவதில்லை என்றும் இங்கு மருத்துவ சேவை உத்தியோகத்தர்களுக்கும் வைத்தியர்களுக்கும் பெரும் பற்றாக்குறை நிலவி வருகிறது என்றும் தெரிய வருகிறது. இம்மாவட்டத்திற்கு எட்டு வைத்தியர்கள் தேவை. ஆனால் தற்பொழுது இருவர் மட்டுமே கடமையில் உள்ளனர். அதேபோல் 48 சுகாதார சேவை அலுவலர்கள் தேவைப்படுகிறது. ஆனால் இரண்டு பேர் மட்டுமே கடமையில் உள்ளனர். இதேபோல 12 பொது சுகாதார பரிசோதகர்கள் தேவைப்படுகின்றனர். ஆனால் ஒருவர் மட்டுமே கடமையாற்றி (4ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் டாங்கி எதிர்ப்பு போருபாயம்
# சிங்கள ராணுவ வட்டாரங்கள் கலக்கம்

### விமானப்படை நோட்டம்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ். நகரின் பல பாகங்களையும் சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று பல தடவை நோட்டமிட்டுச் சென்று மண்டைதீவு மற்றும் கல்முனை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களில் இறங்கி ஏறிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## காலாற்படை சந்திக்கும் பேரிழப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டுள்ள விசேட டாங்கி எதிர்ப்புப் பிரிவினர் மேற்கொள்ளும் போர் யுத்திகளால் ஏற்படும் பெரும் இழப்புக்கள் சிறிலங்கா இராணுவ வட்டாரங்களில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அண்மையில் சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கைகள் யாவற்றிலும் விடுதலைப் புலிகளின் இச் சிறப்புப் படையணியினர் டாங்கிகளையும், கவசவாகனங்களையும் தவறாது தாக்கி அழித்துள்ளனர்.

அண்மைக் காலத்தில் மணலாற்றின் மீதும், யாழ்ப்பாணக் குடாநாட்டின் உள்ளும் சிறிலங்கா இராணுவம் முடிக்கிவிட்ட இராணுவ நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் சிறிலங்கா இராணுவ டாங்கிகள், கவசவாகனங்கள் என்பன பெரியளவில் சேதமாயின. மணலாற்றில் நடந்த ஒப்பரேசன் சிக்சரின் போதும், பின்னர் இடம்பெற்ற ஒப்பரேசன் ஏழு சக்தி நடவடிக்கையின் போதும், பின்னர் சண்டமாருதம் இராணுவ நடவடிக்கையின் போது, ஒப்பரேசன் பலவேகய இரண்டின் போதும் சிறிலங்கா டாங்கிகள் விடுதலைப்புலிகளின் சிறப்பு படையணியிடம் அடிவாங்கிக் கொண்டன.

இறுதியாக ஒப்பரேசன் பலவேகயவின் II போதும், குறைந்தது இருசீன ரி-55 ரகடாங்கிகளாவது சேதமாகியுள்ளதை ஐலண்ட் பத்திரிகை பாதுகாப்பு வட்டாரங்களை மேற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வடபகுதி மீதான
## தாக்குதலைக் கண்டித்து சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கையின் வடபகுதியில் சிறிலங்காவின் பாதுகாப்புப் படைகள் இப்போது எடுத்து வரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக சென்னையில் உள்ள சிறிலங்கா துணைஸ்தானிகாலயத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் நடாத்தப் போவதாக பாட்டாளி மக்கள் கட்சி அறிவித்துள்ளது.

வரும் ஜூலை 20 ஆம் திகதி இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெறும் என்றும், இந்த ஆர்ப்பாட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியுடன் எம். ஜி. ஆர். அகில இந்திய அண்ணா தி. மு. க. கட்சி, இந்திய மக்கள் முன்னணி மற்றும் இந்தியகுடியரசுக் கட்சி ஆகியன பங்கு பற்றும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### படுவான்கரை சுற்றிவளைப்பு மூன்று தமிழர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச்சோலைபகுதியில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினர் படுவான்கரைப்பகுதியின் முனைக்காடு, முதலைக்குடா, கிராமங்களைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு சூடே விமானத்தை விழுத்தப் போதுமானது

**– ஓய்வு பெற்ற ஏயார் வைஸ் மார்ஷல்**

(கொழுமபு)

''இலக்கற்ற வகையில் வந்த சூடு ஒன்று கூட விமானத்தைத் துளைத்திருக்கக் கூடும். வெடிமருந்து மற்றும் ஆயுதங்கள் காணப்பட்ட விமானம் ஒரு அசல் 'டைம் பொ.ம்' தான். அதை வெடிக்க வைக்க சிறு தாக்கம் ஒன்றே போதும்''

விமானம் வெடித்து நிலத்தில் வீழ்ந்ததென்று தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாக'' சிரேஷ்ட இராணுவ அதிகாரியும் தெரிவித்துள்ளார். உத்தியோகபூர்வமாக இராணுவம் இதை ஒப்புக் கொள்ளுமென நான், நினைக்கவில்லை' என்றும் தனது பெயரைக் குறிப்பிட வேண்டாமெனக் கேட்டுக் கொண்ட அந்த ஆய்வாளர் கூறினார்.

## அரசாங்கம் எதிர்கொள்ளும் பாரிய பொருளாதார நெருக்கடி

**- யுத்த விஸ்தரிப்பின் விளைவு**

சிறிலங்கா அரசாங்கம் பாரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளதாகத் தெரியவருகின்றது. வடக்கு-கிழக்கில் தொடர்ந்து நடைபெற்றுவரும் இராணுவ நடவடிக்கைகளின் விளைவே இப்பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் எனத் தெரியவருகின்றது.

வடக்கில் பலமுனைகளில் இராணுவம் தாக்குதல் நடவடிக்கைகளைவிஸ்தரிக்கதின் ...ப்புச் செலவினத்திற்கென 1530 கோடி ரூபா ஒதுக்கப்பட்ட போதும், மேலும் 800 கோடி ரூபா தேவையாகவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன் ஒரு பகுதியை ஈடுசெய்வதற்கென , பாதுகாப்பு வரியும் இரண்டு வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இவ்வருடத்தில் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களுக்கு ஏற்பட்ட பாரிய இராணுவத் தளபாட இழப்புகளும், இராணுவத் தளபாடக் கொள்வனவில் ஏற்பட்ட குழறுபடிகளும் மேலும் பொருளாதாரச் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. இவ்வருட ஆரம்பத்தில் சீனன்குடா விமானப்படைத் தளத்தில் ஏற்பட்ட பாரிய குண்டு வெடிப்பினால் சுமார் 100 கோடி ரூபாவிற்கு மேல் நட்ட

(4. ஆம் பச்சம் பார்க்க)

## இராணுவத் தலைமைக்குள்

கள் காணப்பட்ட விமானம் ஒரு அசல் 'டைம் பொம்' தான். அதை வெடிக்க வைக்க சிறு தாக்கம் ஒன்றே போதும்''

இவ்வாறு சிறிலங்கா விமானப்படைத் தளபதியாக இருந்து ஓய்வுபெற்ற ஏயார் வைஸ்மார்ஷல் ஹரிகுணதிலக தெரிவித்துள்ளார்.

இதே நேரம் இராணுவ அதிகாரிகள் ''தரையில் வீழ்ந்த பின்னரே விமானம் வெடித்ததாக'' தெரிவித்தனர். ''ஆனால் நடுவானில்

...யும் தெரிவித்துள்ளார். உத்தியோகபூர்வமாக இராணுவம்

...டுக் கொண்ட அந்த ஆய்வாளர் கூறினார்.

...வடக்கில் பலமுனைகளில் இராணுவம் தாக்குதல் நடவடிக்கைகளைவிஸ்தரித்ததின் காரணமாக எதிர்பார்த்ததை விடவும் அதிகரித்த செலவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. கடந்த வரவு செலவுத்திட்டத்தில் பாதுகா

# இறுதிவரை விமானி பேசிக்கொண்டிருந்தார்

(கொழும்பு)

இயக்கச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட வை - 8 ரக விமானத்தின் விமானி மாலை 4.58 மணி வரை தம்முடன் தொடர்பு கொண்டு பேசிக் கொண்டிருந்ததாக பலாலி கட்டுப்பாட்டு நிலையம் அறிவித்துள்

[4 ஆம்பக்கம் பார்க்க]

## ஒருவாரத்திற்குள் விசாரணை அறிக்கை

(கொழும்பு)

இயக்கச்சியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட வை-8 ரக விமானம் பற்றிய விசாரணைகளின்அறிக்கையை ஆணைக்குழு ஒரு வாரத்தில் சமர்ப்பிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது குறித்து விசாரணை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வீரச்சாவு

## யுகதீசன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில்இருக்கும்முஸ்லிம்கொலனி என்னும் இடத்தில் இராணுவத்தினர் கடந்த வெள்ளியன்று பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த வீரவேங்கை யுகதீசன் (றொசான் நாகையா ரவி பாழையடிமடு,

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத் தலைமைக்குள் முரண்பாடு அதிகரிப்பு

## சிசிலுக்கு அரச பத்திரிகைகள் ஆதரவு

(கொழும்பு)

இராணுவத் தலைமைக்குள் இதுவரை காலமும் நிலவி வந்த முரண்பாடு அண்மையில் ஒரு பிளவாக மாறியிருப்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது என்று கொழும்பில் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

இராணுவத்தில்லெப்.ஜெனரல் சிறில் வைத்தியரத்னாவின் கை இப்போது ஓங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறிலங்கா பாதுகாப்புத் துறைச் செயலர் ஜெனரல் சிறில் ரணதுங்க மற்றும் கூட்டுப் படை நடவடிக்கை செயலகப் பொறுப்பதிகாரி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா ஆகியோர் ஒதுக்கப்படுவதாகவும் கொழும்பு அரசியல் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதை உறுதிப்படுத்துமாப் போல், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஒப்சேவர் பத்திரிகையும், கூட்டுப் படை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சுடப்பட்ட விமானத்தில் கொல்லப்பட்டோர் விபரம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட வை - 8 ரக விமானத்தில் இருந்த 19 பேர்களின் விபரம் வருமாறு:-

ஸ்குவார்டன் லீடர் டி.எவ். காசிர், பிறைட் லெப்டினன்ட்கள் ஏ. பி. டபிள்யு. பெர்னாண்டோ,பி.எஸ்.பி.மெண்டிஸ், விமானப்படை அதிகாரிகள் விஜேகூன், என்.ஜே. பிரேமரத்னா, ஆர். ஆர். எம். எஸ். ரத்நாயக்கா, சார்ஜன்ட் சில்வா, ஆகியோருடன் எல். எம். எல். கே. பெர்னாண்டோ, எச். பி. டி. ஏ. ஆரியவன்சா, ஜெயவீர, எச்.ஏ.கே. பாலிதா, ஆர். எம். பிரேமரத்னா, ஆர். எம். திலகசிறி பண்டா, பி. பி. லியனாகே, எச். பி. என். ஹப்புதந்திரி, ஹீனாதி கும்புர, எச். ஆர். அபயரட்ணா, டி.கே.வை.ஏ. றஞ்சித், பி.பி.எஸ். டபிள்யு. பீரிஸ் ஆகியோரும் பயணம்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# வை - 8 விமான இறக்கைகள் இன்று மக்கள் பார்வைக்கு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு யுத்தப்பகுதிக்கு அருகில் இயக்கச்சியில் சுட்டு வீழ்த்தப்பட்ட வை - 8 ரக விமானத்தின் இரு இறக்கைகளும் மேலும் சில உதிரிப் பாகங்களும் கைப்பற்றப் பட்டுள்ளன.

இவை இன்று நாவாந்துறையிலும், குருநகரிலும் பொது மக்களின் பார்வைக்கு வைக்கப்படும்.

# ஈச்சந்தீவு சுற்றிவளைப்பு ஐந்து தமிழர்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவுப் பகுதியில் முகாமிட்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் ஈச்சந்தீவு கிராமத்தை சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய பின்னர் ஐந்து தமிழ்ப் பொதுமக்களை கைது செய்து முகாமிற்குக் கொண்டு சென்றுள்ளனர். இவ்விதம் கைது செய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு மானாப்பாடி தவராசா (வயது 45) தவராசா யோகேஸ்வரன் (வயது 22) செல்லையா அரியரத்தினம் (வயது 19) மகானந்தராசா மகாதேவன்(வயது 20) வேலாடபோடி மகேந்திரன் (வயது 24) கடந்த சனியன்று கைதாகிய இவர்கள் அனைவரும் ஈச்சந்தவு கிராமத்தைச் சேர்ந்தவர்களாவர்.

# இரு மீனவர்களை காணவில்லை

முனைக்கடல் பிராந்தியத்தில் மீன் பிடிக்கச் சென்ற இரு மீனவர்களைகடந்த இருதினங்களாக காணவில்லை.

இது பற்றி மேலும் தெரிய வருகையில், கடந்த திங்கட்கிழமை அதிகாலை 3.00 மணிக்கு அ. விஜயராசா (வயது19) ந. சிவநேசன் (வயது21) ஆகிய இருவரும் ஒரு கட்டுமரத்தில் கடலுக்குச் சென்றதாகவும் பின்னர்அவர்கள்சென்ற கட்டுமரம் கரை ஒதுங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களை கடற்படையினர் பிடித்துச் சென்றிருக்கலாமா? சுட்டுவிட்டுச் சென்றிருக்கலாமாவென தெரியாதிருப்பதாக உறவினர்கள் தெரிவித்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய நிலைகளை படையினர் பலப்படுத்தி வருகின்றனர்

(நமது நிருபர்)

வாடியடிப்பகுதியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அங்கு தமதுநிலைகளைப்பலப்படுத்தி வருகின்றனர்.

அங்கு நிலைகளைப்பலப்படுத்திவரும் வேலையில் ஈடுபட்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நேற்று மாலை துப்பாக்கிச் சமர் இடம் பெற்றதாகத் தெரிய

(4ஆம் பக்கம் பார்க்க)

# விமானப்படை வரலாற்றில் மிகமோசமான பெரிய இழப்பு

(கொழும்பு)

சிறிலங்கா விமானப்படையின் சரித்திரத்திலேயே மிக மோசமான பெரிய இழப்பு இது என்று ஞாயிறன்று வை - எட்டுரக விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டது தொடர்பாக கருத்து வெளியிட்ட விமானப் படை வட்டாரங்கள் கூறியுள்ளன. சம்பந்தப்பட்ட வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலன்ட் பத்திரிகை வெளியிட்ட செய்தியில் மேலும் கடந்த காலங்களிலும் ஹெலிகப்டர்களையும், சியாமாச் செட்டிவிமானங்களையும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளின்போதுவிமானப்படை இழக்க நேர்ந்ததுள்ளது.ஆனாலும்,விமானத்தின் சிதைவுகள் எதுவும் கூட படையினருக்கு கிடைக்க முடியாத வகையில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்திற்குள் விழுந்து விட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா விமானப்படையிடம் வை - எட்டுரக விமானங்கள் இரண்டுதான் உண்டு என்றும், அவைபோர்க்களத்திற்கு ஆட்களை ஏற்றிச் செல்லவும், பின்னர் கொழும்புக்கு மீள அழைக்கவும் பெரிதும் பயன்பட்டன என்றும், சுமார் நூறு பயணிகளை ஏற்றிச் செல்லும் வசதிபடைத்தவை இந்தவிமானங்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த விமானத்தை இழந்

(4ஆம் பக்கம் பார்க்க)

# செட்டிகுளம் பகுதியில் இராணுவம் குவிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் நெருக்கமான காவல் அரண்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த இரு மாதங்களில் மட்டும் இப்பகுதியில் இருபதுக்கும் மேற்பட்ட இராணுவக் காவலரண்களை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தது தெரிந்ததே.

இதனையடுத்து செட்டிகுளம் பகுதியில் இராணுவக் காவலரண்கள் நெருக்கமாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழக் காவல் துறையினரால்

# 18,841 குடும்பங்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம்

தற்போதைய போர்க்கால சூழ்நிலையைச் சாட்டாக வைத்துக் கொள்ளை இலாபம் பெறும் நோக்குடன் மக்களின் அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றான மண்ணெண்ணெயைப் பதுக்க முயன்ற வர்த்தகர்களிடமிருந்து தமிழீ

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பெற்றுக் கொள்ளவும்

ஜெனரல் இங்ஸ் லிமிட்டெட் ஊழியரான க. ஜெயபாலசிங்கம்என்பவரால்வட்டுக் கோட்டை கிழக்கைச் சேர்ந்த ஆ. ரோகினி என்பவருடைய பல்கலைக்கழக அடையாள அட்டையும், சிறு தொகைப் பணமும் கொக்குவிலில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரங்களைக் காட்டிப்பெற்றுக் கொள்ளவும்.

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து உடற் கல்விப் பணிப்பாளர்பதவிக்கு விண்ணப்பங்கள் 1992-07-31 வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

### சம்பளஅளவுத் திட்டம்

ரூபா 6000- 10 X 200 -8000 -(வினைத்திறமை காண் தடை)- 8250 -7X 250- 10,000/- மாதமொன்றுக்கு.

### தகைமைகள்

அ) உடற்கல்வியில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் பட்டம் அல்லது ஒத்த அல்லது உயர் தகைமைகளுடன் அத்தகைய பட்டத்தைப் பெற்றதன் பின்னர், பொழுது போக்கு நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்துவதிலும், செயற்படுத்துவதிலும் குறைந்த பட்சம் 12 வருட அனுபவம்.

**அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின் அல்லது உயர்தொழில் தகைமைகளுடன் அத்தகைய பட்டத்தைப் பெற்றதன் பின்னர் பொழுதுபோக்கு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்துவதிலும் குறைந்த பட்சம் 15 வருட அனுபவம்.

வயது: 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது

தெரிவு: நேர்முகப் பரீட்சை மூலம்

மேற்குறிக்க பதவிக்

---

# தேர்தல்களை நடத்தக்கோரி எதிரணிகள் போராட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலையும் பொதுத்தேர்தலையும் நடத்த வேண்டுமென வலியுறுத்தவே மக்களை ஒன்று திரட்டி மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றோம். எமது அடுத்த போராட்டம் மனிதச் சங்கிலி போராட்டமாகும் என்று மக்கள் இரைச்சல் போராட்டத்தின் அமைப்பாளர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இதனை அவர் தெரிவித்தார்.

எதிரணிக் கட்சியினர்நடத்திய மக்கள் இரைச்சல் போராட்டம் பூரண வெற்றியளித்துள்ளது. பொதுமக்கள் அச்சமின்றி அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் கலந்து கொள்கின்றனர் என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது என்றும்,

மனிதசங்கிலிப்போராட்டம் கொழும்பிலிருந்து இரத்தினபுரி வரை நடைபெறும் என்றும்,

65மைல் தூரம் வீதியில் இருபக்கங்களிலும் மக்கள் கைகோர்த்த வண்ணம் இருப்பார்கள். இப்போராட்டத்தில் சுமார் பத்து லட்சம் மக்கள் கலந்து கொள்வார்கள் இந்த மனித சங்கிலி போராட்டம் ஆகஸ்ட் மாதம் நடைபெறும் இதற்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை என்றும்,

தற்பொழுது கம் உதாவ நடைபெறும் புத்தளத்திற்கு அருகிலுள்ள மொனராகலை பிபிலை, வெள்ளவாய போன்ற இடங்களிலும் இரைச்சல் போராட்டம் நடைபெற்றது என்றும்,

இரைச்சல் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களில் 75க்கும் மேற்பட்டவர்களை பொலிசார் கைது செய்துள்ளனர். பொலிசார் சுமார் 50 பேரை அவசரகால சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துள்ளனர் என்றும்,

இரைச்சல் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டாம் என பாடசாலை மாணவர்களை கேட்டிருந்தோம். பாடசாலை மாணவ மாணவிகள் பட்டாசு கொளுத்தி மேசைகளை தட்டி இரைச்சல் போராட்டத்தில் கலந்து கொண்டனர் என்றும் மகிந்த ராஜபக்ஷ தமது பேட்டியில் குறிப்பிட்டார்.

## வட பகுதி பயணி ஒருவர் றாகமையில் கைது

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து யாழ் தேவி ரயிலில் கொழும்பு நோக்கி வந்த வட பகுதி வாசி ஒருவர் றாகமை ரயில் நிலையத்தில் வைத்து இராணுவத்தினர் என்று கூறிக்கொண்ட இருவரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரி. ஆனந்தராஜா என்ற நபரே இவ்வாறு கூட்டிச் செல்லப்பட்டார் என்றும், கடந்த புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு யாழ்தேவிரயில் றாகமையில் தரித்து நின்றபோதே இவர் ராணுவத்தால் அழைத்துச் செல்லப் பட்டார் என்றும், இவரிடம் 50,000 ரூபாய் பணம் இருந்தது என்றும் அவருடன் கூட வந்த அவரது சகோதரர் சோமசுந்தரம் கோட்டை பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

## எழுதுவினைஞர் பதவி; நியமனத்தில் முறைகேடு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபை நிர்வாகத்திற்குட்பட்ட பகுதிகளில் அண்மையில் வழங்கப்பட்டுள்ள தற்காலிக எழுதுவினைஞர் பதவிகள் திறமை அடிப்படையில் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

வட - கிழக்கு மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் தற்காலிக எழுதுவினைஞர்களை சேர்ப்பதற்காக கடந்த பெப்ரவரி மாதம் வவுனியாவில் பரீட்சை நடைபெற்றது.

இப் பரீட்சை பெறுபேறுகளின்படியே நியமனங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் உரிய முறையில் நியமனங்களை வழங்காது சிலருக்கு சலுகைகள் காட்டப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது கூடுதல் புள்ளிகள் பெற்றவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படவில்லை. குறைந்த புள்ளிகள் பெற்றவர்களுக்கு அரசியல் செல்வாக்கின் நிமித்தம் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படு

## இலவச விநியோகம்

1990 இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த குரும்பசிட்டி, குரும்பசிட்டி கிழக்கு கிராமசேவை அலுவலர் பிரிவுகளை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடசாலை உபகரணங்கள் இம்மாதம் 19 ஆம் திகதி சபைத் தற்காலிக அலுவலகம் இயங்கும் மயிலணி சுன்னாகத்தில் வழங்கப்படும்.

இதுவரை விண்ணப்பப் படிவம் பூர்த்தி செய்து கையளிக்கப்படாதவர்கள் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்து கையளிக்குமாறு சன்மார்க்க சபையின் கல்வி அபி

---

## விளையாட்டு போட்டிகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. எஸ். முருகேச பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இவ்விளையாட்டுப் போட்டியிலும் பரிசளிப்பு விழாவிலும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு.பொ. பாலசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக கரவெட்டி பிரதேச செயலர் திரு செ. ஸ்ரீனிவாசன் மாகாணசபை யாழ். மாவட்ட நிர்வாக அதிகாரி திரு வி. வீரபத்திர பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர். பரிசளிப்பு நிகழ்ச்சிகளையடுத்து திரு கே. சண்முகநாதன் நன்றியுரை வழங்கினார். (25)

---

வெற்றிவேல் மாஸ்ரர் நலன் பேணும்

## பழைய மாணவர் சங்கம்

பருத்தித்துறை பூதவராயர் கோவில் ஒழுங்கையில் கல்வி கற்பித்துக் கொண்டு இருப்பவரும் எம்மால் ''வெற்றியர்'' என்று அன்பாக அழைக்கப்படுபவருமான திரு. வெற்றிவேல் ஆசிரியர் அவர்களுடைய நலன்களைப் பேணும் முகமாக பழைய மாணவர் சங்கம் ஒன்றினை அமைக்க விரும்புகிறோம்.

எனவே இவரிடம் கல்வி பயின்றவர்கள் அனைவரும் 11-07-1992 சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு பருத்தித்துறை வீ. எம். வீதியில் அமைந்துள்ள சித்தி விநாயகர் பாடசாலையில் இடம்பெறும் மேற்படி சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தீன்சுவையகம், (முன்னைய ஆனந்தாபேக்கரி) பருத்தித்துறை.

அழைப்பாளர்கள்சார்பில் ந. இராஜநேரு (4666)

---

## 31 - ம் நாள் வீரஅஞ்சலி

## மேஜர் ரவிசங்கர்

( யூலியஸ் வின்சன் கெனடி )



வீரமரணம் 09-06-1992

---

## முக்கிய அறிவித்தல்

### வட மாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர்சங்கம்

1. கட்டடம்
2. நீர்ப்பாசனம்
3. நீர்வள வடிகால்
4. மின்சாரம் + இலத்திரனியல்
5. வீதி அமைத்தல், திருத்தல்
6. உருக்குத் தளபாடம், உருவாக்கல்
7. மரத்தளபாடம்
8. காரியாலய உபகரணங்கள்

வட மாகாணத்தில் உள்ள திணைக்களங்கள் / கூட்டுத் தாபனங்கள் / வங்கிகள் மாநகர சபைகள் நகர பிரதேச சபைகள் ஆகியவற்றில் காணப்படும் மேற்கண்ட வேலைகளை உள்ளடக்கிய சகலவிதமான ஒப்பந்த வேலைகளையும் சங்கத்தில் அங்கம் வகிக்கும் ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே மேற்கொள்ளமுடியும் என்பதை இத்தால் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்றைய காலகட்டத்தில் மேற்கண்ட வேலைகளை மேற்கொள்ளும் நிலையில் உள்ளீர்களா எனத் தீர்மானிக்கும் பொருட்டு சங்கத்தில் ஏற்கனவே பதிவு செய்துள்ளவர்களையும் இதுவரை பதிவு செய்யாதவர்களையும் வருகின்ற 15 - 07 - 1992க்கு முன் சங்கக் காரியாலயத்தில் தொடர்புகொண்டு உங்கள் பெயர்களைப் பதியும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

எ4 / 1 சம்பியன் வீதி, கொக்குவில். (சி/4669)

மு. சி. சண்முகராசா கௌரவ செயலாளர்

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணிலே மலர்ந்தது 24 — 11 — 1970



விண்ணுக்கு விரைந்தது 09 — 06 — 1992

விடுதலைப்புலியானது 29–09–1988

## லெப். வேந்தன் (கில்மன்)

[சாள்ஸ் அன்ரனி விசேட படையணி[

**வேலாயுதபிள்ளை வரதன்**

(உயர்தரவகுப்பு மாணவன் பளை ம. வி)

தம்பி தம்பி என்று தரணியெல்லாம் தேடுகின்றோமடா!
உன்னைக் காணவில்லையே.
தமிழ்மானம் காக்கவென்று தாய்மண்ணை
மீட்கவென்று போனாயடா!
உன்இழப்பால் தவிக்கும் தாய் மனதை தேற்ற
வேறு ஒரு தம்பி இங்கில்லையேடா!
கடமையில் கடைசிவரை கண்ணாயிருந்தாய் உன்
கடமை முடிந்ததென்றோ ஓய்ந்தாயடா!
பயிற்சிதந்த மணலாற்று மண்ணுக்கே உன் உதிரத்தை
உரமாக்கினாயோடா!
அடைக்கலம் என்றிருந்த ஐங்கரத்தண்ணலே
[illegible]

பரீட்சை மூலம்

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவங்களையும், இதர விவரங்களையும் இப்பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23X10 ச. மீற்றர் அளவுடைய கடித உறை அனுப்பப்படல்வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும்/ அல்லது அனுபவத்தையும் கவனத்திற்கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் அவர் வைக்கப்படுவார்.

விண்ணப்ப முடிவுத் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும், தெளிவில்லாமல் விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் தள்ளுபடி செய்யப்படும்.

உடற்கல்விப்பணிப்பாளர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் பரிசீலனை செய்யப்படும். ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்திற்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதிவாளர்**
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-07-07 (சி/4610)

மார்க்க சபையின் கல்வி அபிவிருத்திக் குழு கேட்டுள்ளது.

டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## கத்தி வெட்டில் பெண் பலி; உடைமைகள் கொள்ளை

(வவுனியா)

வீட்டில் தனிமையில் இருந்த பெண்மணி ஒருவரை இனம் தெரியாத நபர்கள் கத்தியால் வெட்டியும், கொத்தியும் காயப்படுத்திவிட்டு அவர் அணிந்திருந்த தங்கக்காப்பு சங்கிலி ஆகியவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இக் கோரச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா பண்டாரிக் குளத்தில் நிகழ்ந்துள்ளது.

காயமுற்ற தவமணிதேவி வயது (32) என்ற அந்தப் பெண்மணி வவுனியா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு மரணமானார்.

வவுனியா நகரில் இருந்து சுமார் $1\frac{1}{2}$ மைல் தூரத்தில் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மக்கள் செறிந்த பகுதியிலேயே பட்டப்பகலில் நடந்த இச் சம்பவத்தையிட்டு மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தாய் தவமணிதேவி தனது மகனை (வயது-12) கடைக்கு சாமான் வாங்க அனுப்பிவிட்டு வீட்டில் தனியாக இருந்த சமயமே இக்கொலை சம்பவம் நிகழ்ந்துள்ளது.


## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**மாதிரிப் பரீட்சை**

**1992 Aug**

பொருளியல் பகுதி I

நாளை பி. ப. 1.00 மணிக்கு

உடன் அனுமதிகளைப் பெறவும்

ஆசிரியர் : க. கலாகரன்

(4671)





மன்னார் தந்த மறப்புலியே
மலையா நெஞ்ச அறப்புலியே
உன்னால் உயர்ந்ததுன்
ஊர்புகழே
உறக்கம் கொண்டாய்
மண்மடியே
விண்ணோர் இறைவன்
திருவடியே
வீரமகனே அமைதி கொள்வாய்
என்னாளும் உம் இதயங்களில்
அகலாதையா நின் நினைவே

புதுமை மாதா கோவிலடி.
யாழ்ப்பாணம். (2774)

தாய், சகோதரர்,
சித்தப்பா, உறவினர்கள்,
அன்பர்கள்.

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

திருப்பூரின்
மைந்தனாக
23-07-1949



திருவடியின்
சொந்தமாக
10-06-1992

**அமரர் திரு. சரவணமுத்து தங்கராசா**

எம் குடும்பத்தின் தலைவனாக - வழிகாட்டியாக எம்மை வாழ வகுத்து வழி நடத்திய தோடல்லாது உற்றாரும் உதவி பெற பங்கு கொண்ட பெருமகனே! எம்மையெல்லாம் கலங்கவிட்டு சென்றதேனோ நாமறியோம் உங்கள் உருவத்தை மனக்கண்ணில் கொண்டு வாழ முயற்சிக்கின்றோம்

எம் குடும்ப ஒளிவிளக்கின் 31-ம் நாள் நிகழ்வுகள் அ. மி. பாடசாலை அருகாமை, இணுவில் கிழக்கில் உள்ள இல்லத்தில் நாளை வெள்ளிக்கிழமை (10-07-1992) நடைபெற உள்ளதென்பதை உற்றோரும் மற்றோரும் அழைப்பிதழாகஏற்கும்படி பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

வேல்வீதி,
மயிலிட்டி.

மனைவி த. அன்னக்கிளியும் மக்களும்

(2770)

உன்னைத் தன்அடிக்கமலத்தில் சேர்த்தாரோடா!
சுதந்திர வேள்வியிலே ஆகுதியானவனே!
மீண்டும் உனக்கொரு பிறப்பிருந்தால் எங்களிடமே
வந்திடடா!

உன் சிரித்த முகத்தை காணத்தவிக்கும்
''திருவதிகை'' அப்பா, அம்மா, அத்தான், அக்கா,
அளவெட்டி. உறவினர்கள், நண்பர்கள்.
(2775)

## நினைவு கூருகின்றோம் ... 1992-07-09

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட முற்றுகையின்போது ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

★ மதன் (லோ. மதன்-அக்கரைப்பற்று, அம்பாறை.)

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சி - இராமநாதபுரம் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்-

1990 ஆம் ஆண்டு திருக்கோணமலை கல்லோயாப் பகுதியில் சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட புகையிரதப் பகுதி ஊழியரான சண்டிலிப்பாயைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட வண்ணார் பண்ணையைச் சேர்ந்த தமிழ்ப் பெண் - குரும்பசிட்டி கற்பகப் பிள்ளையார் கோயிலடியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் ஈரோஸ் அமைப்புஇயங்கியகாலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4668)

சிந்தனைக்கு

தவிர்க்க முடியாத தீங்கைத் துணிவுடன் தாங்குவதன் மூலம்தான் வெல்ல முடியும்.
— பிறநாட்டுப் பழமொழி.


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## அரசு உணர வேண்டிய யதார்த்தம் இது

வடக்கிலும், கிழக்கிலும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி அரசியல் தீர்வுகாண வேண்டியது அவசியம் என அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா பாராளுமன்றத்தில் பாதுகாப்பு வரி அறவீட்டுக்கான சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

சிறிலங்கா அரசதரப்பினர் உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி நிதி தொடர்பான விடயங்கள் வரும்போது இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பாகப் பேசுவது ஒரு வழமையான நடவடிக்கையாகும்.

இவ்வாறானதொரு நிலையிலேயே தற்பொழுதும், அரசியல் தீர்வும், சிவில் நிர்வாகம் பற்றியும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா பேசியுள்ளார். அதாவது, இவ்வருட வரவு - செலவுத்திட்டத்தில் பாதுகாப்புச் செலவிற்கு ஒதுக்கப்பட்ட நிதி போதாத நிலையில், பாதுகாப்புவரியை ஒரு வீதத்தில் இருந்து மூன்றுவீதமாக அதிகரிக்கும் சட்டமூலத்தின் மீதான விவாதத்தின் போதே அமைச்சர் ரணில்விக்கிரமசிங்கா இவ்வாறு பேசியுள்ளார்.

மேலும்,“வடக்கு கிழக்கு” இராணுவ நடவடிக்கைகளினால் பாதுகாப்புசெலவினம்அதிகரித்துள்ளது. வரவு செலவுத்திட்டம் தயாரிக்கும் போது இவற்றை அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை. யதார்த்த நிலையை உணர்ந்து அனைவரும் செயற்பட வேண்டும்” எனவும் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா பேசியுள்ளார்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்காவின் கூற்றில் எந்தளவிற்கு உண்மையுள்ளது. எந்தளவிற்கு அவர் பேச்சை நம்பலாம் என்பது ஒருபுறமிருக்க கடந்த காலத்திலும் சிறிலங்கா அரசாங்கம் இராணுவச் செலவீட்டிற்கென வரவு செலவுத் திட்டத்தில் ஒரு பெரும் தொகையை ஒதுக்குவதும் பின்னர் அத்தொகை போதாது என குறை நிரப்புப் பிரேரணை மூலம் மேலதிக நிதி ஒதுக்குவதும் வருடா வருடம் நடந்து வரும் ஒரு வழமையான நடவடிக்கை ஆகும். ஆகையால் இராணுவச் செலவீடு ஒதுக்கீட்டை விடக் கூடச் செல்வது சிறிலங்காவில் புதிய தொன்றல்ல.

# “தடா” குறித்த அரசின் உத்தரவு கருணாநிதியை கட்டுப்படுத்தாது

பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (தடா) கீழ் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்போரை அவர்களது குடும்ப உறவினர்கள் மாத்திரமே சென்று பார்வையிட முடியும் என்ற அரசாங்கத்தின் உத்தரவு தி. மு. க. தலைவர் மு. கருணாநிதியைக் கட்டுப்படுத்தாது.

நீதிபதி எஸ். கோவிந்தசாமியினால் அரசாங்க உத்தரவின் செயற்பாடு மீது பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவை அடுத்தே இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த இடைக்காலத் தடையுத்தரவு மனுதாரரான கருணாநிதிக்கு மாத்திரமே ஏற்புடையது என்பதைக் கூறி வைக்கவும் நீதிபதி தவறவில்லை.

கருணாநிதி தமது மனுவில் தெரிவித்திருந்ததாவது:

முன்னாள் அமைச்சரான திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன், அவரது கணவர் ஜெகதீசன்மற்றும்வைரவிச்சந்திரன் ஆகியோர் ‘‘தடா’’ சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

மதுரை மத்திய சிறையில் பெப்ரவரி 27 இல் திருமதி ஜெகதீசனையும் கணவரையும் சென்னை மத்திய சிறையில் ஏப்ரல் 28 இல் ரவிச்சந்திரனையும் நான்சென்று பார்வையிட்டிருக்கின்றேன். கடந்த யூன் 11 இல் மதுரையில் நடைபெறவிருந்த கூட்டமொன்றில் நான் உரையாற்றத் திட்டமிட்டிருந்தேன். அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ராஜாஜி ஆஸ்பத்திரியில் தீவிர இருதய சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்ற ஜெகதீசனை பார்வையிட திட்டமிட்டேன். எனது இந்த நிகழ்ச்சி நிரல்கள் பத்திரிகைகளிலும் வெளியாகியிருந்தது.

இதையறிந்த அரசாங்கம் யூன் 8 இல் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தது. இந்த உத்தரவின் பிரகாரம் தடா கைதிகளை அவர்களின்குடும்ப உறவினர்கள் மாத்திரமே பார்வையிட முடியும். இதனால் இரு ‘‘தடா’’ கைதிகளையும் மதுரை சிறையில் என்னால் பார்வையிட முடியவில்லை. அதன் காரணத்தினால் தான் இந்த மனுவை சமர்ப்பிக்கின்றேன்.

உயர் நீதிமன்றத்தின் உத்தரவிற்கு முற்றிலும் முரணான முறையிலேயே அரசாங்கத்தின் உத்தரவு அமைந்திருக்கிறது. என் மீதான கட்டுப்பாடுகள் பாரபட்சமானவை. அத்துடன் இந்திய அரசியலமைப்பையும் மீறுபவையாக அமைகின்றன. பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட ‘‘தடா’’ சட்டம் கூட அத்தகைய கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை. எனவே அரசாங்கத்தின் உத்தரவை ரத்துச் செய்யுமாறு வேண்டுகின்றேன். இந்த மனு மீதான விசாரணைகள் முடியும் வரை அரசாங்க உத்தரவின் செயற்பாடு மீது இடைக்காலத் தடை பிறப்பிக்கவும் வேண்டும். இவ்வாறு கருணாநிதி தமது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட போது கருணாநிதி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் அரசாங்கத்தின் உத்தரவு மீது இடைக்காலத் தடை பிறப்பிக்க வேண்டும் என்று கோரினார்.

நாட்டின் பாதுகாப்பு நலன் கருதி அரசாங்கம் அத்தகைய கட்டுப்பாடுகளைக் கொண்டு வர முடியும். தடாக் கைதிகளை தான் சென்று பார்வையிட அனுமதிக்குமாறு உத்தரவிட வேண்டுமென மனுதாரர் கோரவுமில்லை. எனவே அரசாங்கத்தின் உத்தரவை இடைநிறுத்தத் தேவையில்லை என அரசாங்கத்தின் வழக்கறிஞர் கூறினார்.

ஆனால் அரசாங்கத்தின் உத்தரவு மீதான இடைக்காலத் தடை மனுதாரருக்கு மாத்திரம் பொருந்தக் கூடியதாக அமையுமேயானால் அதை ஆட்சேபிக்கவில்லை என்றும் அரச வழக்கறிஞர் தெரிவித்தார்.

இதையடுத்து மனுதாரரான கருணாநிதியைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் உத்தரவின் செயற்பாடு மீது இடைக்காலத் தடை விதிப்பதாக நீதிபதி கூறினார்.

மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் மாநில உள்துறைச் செயலாளர், சிறைச்சாலை இன்ஸ்பெக்டர், ஜெனரல் ஆகியோர் நான்கு வார காலத்தில் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று பணிக்கும் உத்தரவையும் நீதிபதி பிறப்பித்துள்ளார்.

# ஹிட்லரது பிரசார மந்திரியின் ‘டயறி’ ரஷ்யாவில் கண்டுபிடிப்பு

(லண்டன்)

ஹிட்லரின் பிரசார மந்திரியாக இருந்த ஜோஸப் கோயபல்ஸின் டயரிகள் மாஸ்கோவில் கண்டுபிடிக்கப்பட்டதாக பிரிட்டிஷ் பத்திரிகையான ‘‘இன்டிபென்டன்ட்’’ தெரிவித்துள்ளது.

கடந்த 47 ஆண்டுகளாக மொஸ்கோவில் மத்திய அரசாங்க புதைபொருள் பிரிவில் வைக்கப்பட்டிருந்த இந்த டயரிகள் மியூனிச் சரித்திர நிபுணர் ஒருவரினால் கண்டு பிடிக்கப் பட்டது. அதுவரை இந்த டயரிகள் என்ன என்பது ரஷ்யர்களுக்கே தெரிந்திருக்கவில்லை. உலகிலேயே தலைசிறந்த கோயபல்ஸ் சம்பந்தமான நிபுணர் எல்கி புரோலிக் கண்டுபிடித்துள்ள இந்த டயரிகள் உண்மையானவை என இன்டிபென்டன்ட் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாண்டுக் கடைசியில் இந்த கோயபல்ஸ் டயரிகளை தொடர்ச்சியாக ‘‘சண்டே ரைம்ஸ்’’ பிரசுரிக்கவுள்ளது. பிரிட்டிஷ் சரித்திர ஆசிரியரான டேவிட் இர்விங் சண்டே ரைம்ஸ் சார்பாக இதுகுறித்து ரஷ்ய புதைபொருள் பிரிவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியிருக்கிறார்.

கொள்கைக்கு வலுவூட்டும் மிகத்திறமையான பிரசார இயக்கத்தை கோயபல்ஸ் மேற்கொண்டிருந்தவர் ஆவார்.

1924 முதல் 1945 ஏப்ரல் 29 ஆம் திகதி வரை கோயபல்ஸ் தினமும் டயரிகளில் குறிப்புக்களை எழுதினார். இதற்குஇரு தினங்களுக்குப்பின் கோயபல்ஸும் அவரது மனைவியும் தங்கள் ஐந்து பிள்ளைகளையும் கொன்றுவிட்டு தாங்களும் பேர்லின் பாதுகாப்பு அரணுக்குள் தற்கொலை செய்து கொண்டனர். ரஷ்யத்துருப்புக்கள் பேர்லினுக்குள் நுழைந்த போது இச்சம்பவம் இடம் பெற்றது.

கோர்பல்ஸின் டயறிகள் நாஸி தலைவர்கள் பற்றிய பல உண்மைகளைத் தெரிவிக்கும் என இன்டிபென்டன்ட் கூறியுள்ளது.

கோயபல்ஸ் டயரிகள் இன்னும் பெறுமதிமிக்கவை என ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் பீட்டர் கூறியுள்ளார். நாஸி ஆட்சி பற்றிய விஷயங்களில் இவர் ஓர் நிபுணர் ஆவார்.

கோயபல்ஸின் டயறிகளை பிரிட்டிஷ் பத்திரிகைகளில் வெளியிடுவதற்கு உதவும் வலதுசாரி சரித்திராசிரியர்கள் டேவிட் இர்விங்குக்கு எதிராக இலக்கானவர்களின் உறவினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் லண்டனில் உள்ள இர்விங்கின் வீட்டை மறியல் செய்ததுடன் அவரது ஆதரவாளர்களின் கூட்டமொன்றிலும் ஆர்ப்பாட்டம் செய்தனர். யூதர்களுக்கு எதிரான நாஸி அட்டூழியம் மிகைப்படுத்தப்பட்டதாக இவர்கள் கூறியதே இதற்குக் காரணம்.

பொலிஸாருக்கும் கூட்டத்தினருக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பில் ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டனர்.

அறுபது இலட்சத்துக்கும் மேற்பட்ட யூதர்களை ஹிட்லர் கொலை செய்திருந்தும் அவருக்குத் தெரியாமலே இவை நடைபெற்றதாக கூறப்படுவதனை பாதிக்கப்பட்டோரின் உறவினர்கள் எதிர்த்தனர்.

1938 ஆம் ஆண்டு யூதர்கள் மீது நடத்தப்பட்ட ‘கிறிஸ்டல் நாச்ட்’ தாக்குதல் குறித்து கோயபல்ஸ் ஹிட்லருடன் விவாதித்ததாகவும் அப்போது ஹிட்லர் மட்டுமன்றி தானும் யூதர்களின் துன்பம் குறித்து பெரும் மகிழ்ச்சியுற்றதாகவும் இந்த டயறிகளில் காணப்படுகின்றது.

‘‘ஆகாயம் இரத்தச் சிவப்பாக உள்ளது. யூத ஆலயம்

## கோலான் குன்று பகுதியை குத்தகைக்கு விட முடியாது

– பாரூர் அல் - ஷாரா

(கெய்ரோ)

இஸ்ரேல் கைப்பற்றிய கோலான் குன்றுப்பகுதி குத்தகைக்கு விடப்படமாட்டாது. எல்லையின் ஒவ்வொரு அங்குலத்தையும் இஸ்ரேல் திருப்பித் தரவேண்டும் என சிரியாவின் வெளிநாட்டு அமைச்சர் பாரூக் அல். ஷாரா தெரிவித்துள்ளார்.

லெபனானில் அரபுலீக் கூட்டமொன்றில் கலந்து கொள்ளச் சென்ற சமயம் கெய்ரோ விமான நிலையத்தில் செய்தியாளரிடம் பேசும் போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் 1967 ஆம் ஆண்டு இடம் பெற்ற மத்திய கிழக்கு யுத்தத்தின்போது சிரியாவுக்கு சொந்தமான கோலான் குன்று பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது அதனால் ஒவ்வொரு அங்குலமும் திருப்பித் தரவேண்டும்.

கைப்பற்றப்பட்ட கேந்திரப் பகுதியை இஸ்ரேலுக்கு குத்தகைக்கு கொடுப்பது குறித்த திட்டமொன்றையும் ஆராய விரும்புவதாக தொழிற்கட்சித் தலைவர் யிட்ஷாக் ராபின் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாரூர் அல். ஷாராவிடம் கேட்கப்பட்ட போது கோலான் குன்றுப் பகுதியை இஸ்ரேல் விட்டுக் கொடுக்கக்கூடாது எனத் தெரிவித்தார். சமாதானம் ஒப்பந்தம் என்று மேற்கொள்ளப்பட்டாலும் இது விடயத்தில் இஸ்ரேல் தலைகுனியக்கூடாது என யிட்ஷாக் ராபினும் அப்போது தெரிவித்திருந்தார்.

எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண ஓரளவு இடமிருக்கிறது. ஆயினும் கைப்பற்றப்பட்ட பகுதியை குத்தகைக்கு விட இணங்க முடியாது என அல். ஷாரா கூறினார்.

## தாக்கியவர்களை தண்டிக்க சீனா வேண்டுகோள்

(பெல்ஜிங்)

டாக்காவிலுள்ள தனது தூதரகத்தை தாக்கியவர்களை தண்டிக்குமாறு சீனா பங்களாதேஷ் அரசைக் கேட்டுள்ளது.

மனித உறுப்புக்களை ஆராய்ச்சி செய்வதற்காக

தெரிவித்தது.

இதே வேளை தூதரக வளவில் தாங்கள் வேலை செய்த போது மண்டை ஓடுகளையும் எலும்புகளையும் கண்டதாக இனந்தெரியாத சிலர் கூறியதை அடுத்து ஒரு கூட்டம் தூதரகத்தை தாக்கியதாக

செல்வது சிறிலங்காவில் புதிய தொன்றல்ல.

இதேவேளை சிறிலங்காவின் இராணுவச் செலவீடு கட்டுக்கடங்காமல் செல்வதற்கு விடுதலைப் புலிகள் பற்றியும், அவர்களின் பலம் பற்றியும் சிறிலங்கா அரசாங்கம் கொண்டிருந்த தவறான மதிப்பீடும் காரணமாகும். இவ்வருட வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும்போது புலிகள் இன்னும் சில மாதங்களில் ஒடுக்கப்பட்டு விடுவார்கள் என்றே சிறிலங்கா அரசாங்கமும், இராணுவமும் நம்பியிருந்தன. அப்பொழுது திட்டமிட்டிருந்தபடி ஜனவரியில் (1992) ஆரம்பிக்கப்பட இருந்த யாழ்ப்பாணத்தின் மீதான படை எடுப்புடன் புலிகள் முற்றாக ஒடுக்கப்படுவார்கள் என்றும், இதன்மூலம் இராணுவச் செலவீடு குறையும் எனவும், திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், நிலைமை வேறுவிதமாக இருந்தமையால் செலவீடு அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியாமல் போயுள்ளது. இந்நிலையிலேயே மீண்டும் நிதி வளங்கள் திரட்டப்படுகின்றன.

ஆனால் இவ்வருடத்திற்குள்ளும்சிறிலங்கா அரசாங்கத்தினால் இப்பிரச்சினையை தீர்த்து விட முடியாது. ஆகையினால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் வரை இந்நிதிவிடயம் தொடர்ந்து கொண்டே இருக்கும். சிறிலங்கா அரசாங்கம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு எனக் கூறிக் கொண்டாலும் இராணுவத் தீர்வையே நாடி நிற்கிறது. இராணுவ வெற்றி மூலம் பிரச்சினையைத் தீர்க்கலாம் எனவும் அதன் பின்னர் அரசாங்கம் திணிக்கும் தீர்மானமே அரசியல் தீர்வு என்றும் அரசாங்கம் கருதுகின்றது. இது நடைமுறைச் சாத்தியமான தொன்றல்ல.

இந்நிலையில் அமைச்சர் ரணில் கூறியுள்ளது போன்று "யதார்த்த நிலையை உணர்ந்து அனைவரும் செயற்பட வேண்டும்" என்பதை முதலில் அரசாங்கமே கருத்திற் கொள்ள வேண்டும். யதார்த்த நிலையை அரசாங்கம் சரியாகக் கணிப்பிடுமானால் இராணுவத் தீர்வு இனப் பிரச்சினைக்குத் தீர்வாகாது என்பதை உணர்ந்து அரசியல் தீர்வு காண்பதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்துவதோடு, இராணுவச் செலவீட்டையும் மட்டுப்படுத்தலாம். இதன்மூலம் நிதி நெருக்கடிகளையும் தீர்க்கலாம். ஆனால் இந்த யதார்த்தத்தை அரசு உணர்வதாகத் தெரியவில்லை.

---

யிருக்கிறார்.

கோயபல்ஸ்ஹிட்லரின் மிகப் பெரும் பிரசார இயந்திரமாகச் செயல்பட்டார் என்பது உலகப் பிரசித்தமானது. ஆரியர்களே உலகில்உயர்ந்த இனத்தினர். யூதர்கள் ஜிப்ஸிகள், மற்றவர்கள் எல்லோரும் மனிதர்களைவிட குறைந்தவர்கள். அவர்களை உலகைவிட்டு அழித்துவிட வேண்டும் என்ற ஹிட்லரின் ஆரிய மதத்துவ

நிவாரண உதவிக்கு

ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

ஹிட்லரின் கொடுமைக்கு

பற்றி எரிகிறது'' என டாக்டர் கோயபல்ஸ் மகிழ்ச்சியுடன் எழுதியுள்ளார்.

# பெரும்பான்மை ஆட்சியின்றி பேச்சுவார்த்தைகள் இல்லை

## – நெல்சன் மண்டேலா

(கேப்டவுன்)

தென் ஆபிரிக்க ஜனாதிபதி எப். டபிள்யூ. டீ. கிளார்க் பெரும்பான்மை ஆட்சியை தவிர்க்க முடியாதென்பதை ஏற்றுக்கொள்ளும் வரை பல்இன ஜனநாயகம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படமாட்டாது என ஏ.என்.சியின் தலைவர் நெல்சன் மண்டேலா தெரிவித்துள்ளார்.

'ஜனநாயகம் தொடர்பான கேள்வி அடிப்படையானது' பெரும்பான்மை ஆட்சிதேவை என்பதே என்பதுதான் எமது வலியுறுத்தலுமாகும் எனவும் அவர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த மே மாதம் நடத்தப்பட்ட பல கட்சிப் பேச்சுவார்த்தைகள் முறிவுற்றுள்ளன. சிறுபான்மையினரின் ஆதிக்கத்தையே ஜனாதிபதி கிளார்க் இப்போதும் மனதில் கொண்டிருக்கிறார் என மண்டேலா தெரிவித்தார்.

ஜனாதிபதிகிளார்க் கடந்த வியாழக்கிழமை மண்டேலாவுக்கு அனுப்பிய ஒரு நீண்ட கடிதத்தில் இனபேதமற்ற ஜனநாயகம் ஒன்றை தாம் நிலைநிறுத்த வேண்டியிருப்பதாகவும் அதன் மூலம் சிறுபான்மைக் கட்சிகள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்க வகை செய்யவேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தமைகுறிப்பிடத்தக்கது.

# குந்தகம் விளைவித்தால் இராணுவ நடவடிக்கை

## – சேர்பியாவிற்கு அமெ. எச்சரிக்கை

(நியூயோர்க்)

யுக்கோசுலோவேக்கியாவிலிருந்து பிரிந்து தனிநாடாக மாறியிருக்கும் பொஸ்னியா-ஹெர்ஸிகோவின்ஸா குடியரசுக்கு ஐ.நா. அமைதிகாக்கும் படையின் சார்பில் நடந்துவரும் மனிதநேய நிவாரண உதவிகளைக் குலைக்கும் வகையில் சேர்பியக்குடியரசுப் படைகள் நடந்து கொண்டால் தாம் சர்வதேச அளவில் இராணுவ நடவடிக்கை எடுப்பதை வலியுறுத்தும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

மேலும், சேர்பியக் குடியரசு மீண்டும் தாக்குதலில் ஈடுபட்டால் சேர்பியாவுக்கு எதிராக சர்வதேச அளவில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ள ஐ.நா. சபை தீர்மானம் நிறைவேற்றத் தான் வற்புறுத்தும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

# போடியாவைக் கொன்றவர் கைது செய்யப்பட்டுள்ளார்?

(அல்ஜியாஸ்)

அல்ஜீரியத் தலைவர் போடியாவைக் கொன்ற நபர்பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தப்பி ஓடியபோது கைது செய்யப்பட்டுள்ளார் என பிரதம வழக்குத் தொடுநர் மொகமத் டிக்ராமி தெரிவித்துள்ளார்.

26 வயதான சப்லெப்டினன் லம்பரைப் பூமராப் என்பவரே கொலையாளி என்றும் ஜனாதிபதியின் விசேட பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றி வந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர் தனியாகவே இக் கொலையைச் செய்துள்ளதாக உள்நாட்டு பாதுகாப்பு படைத் தலைவர் பெல்கியர் அல்ஜீயர்ஸ் வானொலியில் தெரிவித்துள்ளார்.

முரட்டு மனிதனான கொலையாளி அல்ஜீயர்சின் கிழக்கு பகுதியைச் சேர்ந்தவர் என பத்திரிகைக் குறிப்பு தெரிவிக்கிறது.

போடியாப் சுடப்பட்ட பின்பு பலநிமிட நேரம் துப்பாக்கி சமர் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை தாம் பதவி நீக்கம் செய்யப்பட்டதான வதந்தியை அந்நாட்டின் சக்தி வாய்ந்த மனிதர்களில் ஒருவரான பெல்கியர் மறுத்துள்ளார்.

# யெல்ட்ஸினுக்கு சம்பள உயர்வு

(மொஸ்கோ)

ரஷ்ய பாராளுமன்ற ஜனாதிபதி யெல்ட்ஸினின் மாதச் சம்பளத்தில் 150 டொலரை உயர்த்தி இருக்கிறது.

---

பங்களாதேஷியர்களை சீனத் தூதரகத்தைச் சேர்ந்தவர்கள் கொன்றதாகவும் மனித மண்டைஓடுகள் தூதரக வளவில் காணப்பட்டதாகவும் வெளியான வதந்திகளை அடுத்தே ஆர்ப்பாட்டக்காரர்கள் கடந்த வியாழன் தூதரகத்தை தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நட்புநாட்டு மண்ணில் இத்தகைய சம்பவம் இடம்பெறும் எனத் தம்மால் நம்ப முடியாமல் இருப்பதாக சீனத் தூதுவர் சென்சொங்லு கூறியதாக சீனப்பத்திரிகை ஒன்று

பொலிசார் தடியடிப் பிரயோகம் கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை மேற்கொண்டதில் 74 பேர் காயமடைந்ததாகவும் 12 பேர் வரையில் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனாலும் பங்களாதேஷிகள் கொல்லப்பட்டதாக கூறப்பட்டவதந்திகளை சீனத் தூதரும் பங்களாதேஷ் வெளிநாட்டு அமைச்சு அதிகாரிகளும் ஆதாரமற்றன எனக் கூறி நிராகரித்து விட்டனர்.

# பர்மிய இராணுவத்தின் அடாவடித்தனம்

(தாய்லாந்து)

பர்மிய இராணுவ வீரர்கள் முஸ்லிம் எம். பி. ஒருவரை அடித்துக் கொலை செய்த சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

பங்களாதேஷில் அடைக்கலம் புகுந்துள்ள பர்மிய முஸ்லிம் அகதிகளை திரும்பி வருமாறு கோரப்பட்டபோது அவர் மறுத்ததனை அடுத்தே இவர் கொலை செய்யப்பட்டதாக முஸ்லிம் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முஸ்லிம் மாகாணமான மாங்டாங் தொகுதியின் எம். பி. யான மொகமத் இலியாஸ் உட்பட மற்றும் நான்கு எம். பி. க்களையும் பங்களாதேஷுக்குள் சென்று அங்குள்ள முஸ்லிம் அகதிகளைத் தாயகம் திரும்பும்படி வலியுறுத்துமாறு இராணுவத்தினர் உத்தரவிட்டனராம்.

பர்மிய அரக்கான் மாகாணத்திலிருந்து 28,0000 முஸ்லிம்கள் இராணுவத் தாக்குதலுக்கு அஞ்சி பங்களாதேஷில் அடைக்கலம் புகுந்திருந்தனர்.

ஆனால் பங்களாதேஷிக்குள் செல்ல மறுத்த ஐந்து எம். பிக்களையும் இராணுவத்தினர் கைது செய்து அவர்களைத் தாக்கினார்கள் 60 வயதான இலியாஸ்சாகும் வரை தாக்கப்பட்டதுடன் ஏனைய நான்கு எம். பிக்களும் படுகாயமடைந்தனர்.

கொல்லப்பட்ட இலியாஸ் மனித உரிமை ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர். 1980 ஆம் ஆண்டு ஜனநாயகத் தேர்தலில் அவர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சித் தலைவராக சிக்கந்தர்பந்த்

(டில்லி)

பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த சிக்கந்தர் பந்த் ராஜ்யசபாவில் எதிர்கட்சித் தலைவராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார்.

இந்த முடிவை ராஜ்யசபாத் தலைவர் சங்கர் தயாள் சர்மா எடுத்தார். அண்மையில் நடந்த இடைத்தேர்தல்கள் காரணமாக ராஜ்ய சபாவில் பாரதீய ஜனதாக் கட்சி தனிப் பெரும் கட்சியாக இருந்து வருகிறது.

ஈழநாதம்

# இன. பிரச்சினையில் தலையிட எம். ஜி. ஆர். விரும்பவில்லை

**-- முன்னாள் டி. ஐ ஜி. கே. மோகன்தாஸ்**

(சென்னை)

ஆரம்பம் முதலே இந்திய அரசு இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிட்டு வந்ததை எம். ஜி. ஆர். விரும்பவில்லை.

இவ்வாறு அமரர் எம். ஜி. இராமச்சந்திரன் தமிழக முதலமைச்சராக இருந்த போது தமிழக காவல் துறையில் டி. ஐ. ஜி. யாகப் பணியாற்றியவரும், எம். ஜி. ஆரோடு நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்தவரும், அவரின் அந்தரங்க ஆலோசகராகவுமிருந்த கே. மோகன் தாஸ் கூறியுள்ளார். எம். ஜி. ஆர். த மேன் அன்ட் மித் (எம். ஜி. ஆர். என்னும் மனிதனும் மாயையும்) என்றபுத்தகத்தை எழுதியுள்ள கே. மோகன் தாஸ் அண்மையில் அதனை வெளியிட்டுள்ளார். இப் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அம்சங்கள் பற்றி நிருபர்களிடம் அவர் மேலும் விளக்குகையில்,

இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவினால் எடுக்கப்பட்ட கொள்கை முடிவுகளுக்கு மறைந்த பிரதமர் ராஜீவ் காந்தியை பட்டும் குறை கூறுவது மிக மோசமான செயல் என்றும், இத்தகைய முடிவுகளுக்கு அவருடைய கொள்கை ஆலோசகர்களே காரணம் என்றும் அவர்களையே குறைகூற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

மேலும் ஒரு புறம் இலங்கையின் ஒருமைப்பாட்டை கட்டிக் காக்க வேண்டும் என்று கூறிக்கொண்டே மற்றொரு புறம் இந்திய மண்ணில் போராளிகளுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கும் இரட்டைக் கொள்கை தொடரச் செய்ய அந்த ஆலோசகர்கள் தங்களது சுயநல நோக்கங்களுக்காக ராஜீவ் காந்தியை சம்மதிக்கச் செய்தனர் எனத்தெரிவித்தார்.

அத்துடன், 1980 ஆம் ஆண்டு தமிழகத்தில் மாநில அரசுக்கு தெரியாமலேயே போராளிகளுக்கு பயிற்சி முகாம்களை மத்திய அரசே அமைத்துக் கொடுத்தது. இலங்கை இனப்பிரச்சினை முழுக்க முழுக்க அந்நாட்டின் உள்நாட்டு விவகாரம் அதில் நாம் தலையிடக்கூடாது என எம். ஜி. ஆரிடம் கூறியிருந்தேன் என்றும்,

1985 ஆம் ஆண்டு மீனம்பாக்க விமான நிலைய வெடிகுண்டு விபத்தில் 30 பேர் மரணமடைந்தபோது போராளிகளின் கைவரிசையை மத்திய அரசு திசை திருப்ப முயன்றது என்றும்,

ஆனால் அச் சம்பவம் இஸ்ரேலிய மொசாட்பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டது எனத் திரித்துக் கூறப்பட்டது. இச் சம்பவத்திற்கு காரணமான தமிழீழ படையைச் சேர்ந்தவர்களும் அவர்களுக்கு உறுதுணையாக இருந்த உள்ளூர் தமிழர்களையும் கைதுசெய்து உண்மைக் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டனர் என்றும்,

1986 இல் சார்க் மாநாட்டையொட்டி பெங்களூருக்கு ஜே. ஆர். வந்தபோதும் அவரது பாதுகாப்பை கருத்திற் கொண்டு போராளிகளிடம் ஆயுதங்களை தமிழக பொலிசார் பறித்து விட்டனர் என்றும் தெரிவித்தார்.

# ஆரம்ப ஆசிரியர் பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும்

**-கல்விப்பணிப்பாளர்**

(யாழ்ப்பாணம்)

ஆரம்ப ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குரிய வினாத் தாள்களும், அனுமதி அட்டைகளும் யாழ். கல்வித்திணைக் களத்திற்கு எடுத்துவரப்பட்டிருக்கிறது. எனவே இப் போட்டிப்பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி திட்டமிட்டபடி நடைபெறும்.

இப் பரீட்சைக்கான அனும்தி அட்டைகளை யாழ். கல்வித் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளும்படி பரீட்சார்த்திகள் கே...

...ளும்படியும் கேட்கப்பட்டிருக்கிறது. சில பரீட்சை நிலையங்கள் இட மாற்றம் செய்யப்பட்டிருபபதால் பரீட்சார்த்திகள் தமது பரீட்சை நிலையங்களை உறுதிப்படுத்திக் கொள்ளும்படியும் கேட்கப்பட்டிருக்கிறது.

(க), (பா)

# அ.தி.மு.க. தொண்டர் ஒருவர் பலமாகத் தாக்கப்பட்டார்

**- மதுரை மாநாட்டில் சம்பவம்**

(சென்னை)

மதுரையில் அண்மையில் நடைபெற்றஅ.இ.அ.தி.மு.க. மாநாட்டின் ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய தொண்டர் ஒருவர் சக உறுப்பினர்களால் பலமாகத் தாக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது; மதுரை மாநாட்டிறகாக திரும்புகின்ற திசையெல்லாம் கட் அவுட்கள் வைக்கப்பட்டிருந்தன. இவற்றில் மொத்தம் ஐம்பத்திரண்டு கட்அவுட்கள் ஜெயலலிதாவின்படங்களால் நிறைந்திருந்தனஅமரர்அண்ணாதுரைக்கும் அமரர் பெரியாருக்கும் தலா இரண்டு கட் அவுட்களும், அமரர் எம். ஜி. ஆருக்கு நான்கு கட் அவுட்களும் மட்டுமே வைக்கப்பட்டதைக் குறையாகச் சுட்டிக்காட்ட முனைந்த தொண்டரே தாக்கப்பட்டவர் ஆவர்.

# இந்தியாவுடன் நல்லுறவுக்கு முயற்சிகள் எடுக்கப்படும்

## சீதனம் கோரியதால் தற்கொலை

(சென்னை)

சீதனமின்றித் திருமணம் செய்ய காதலன் மறுத்ததால் இந்தியா-பாண்டிச்சேரி அகதி முகாமிலுள்ள இலங்கைப் பெண் ஒருவர் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இரு இளம் பெண்கள் கைது

[கொழும்பு]

இந்தியாவிலிருந்து சீகைக்காய் தூள்எனக்கூறி ஹெரோயினைக் கடத்த முற்பட்ட கொழும்பைச் சேர்ந்த இரு இளம் பெண்கள் நேற்று முன்தினம் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

## உறவு வலுவடையுமாம்

(கொழும்பு)

சிறிலங்கா - அமெரிக்கா நட்புறவு மேலும் வலுவடையும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இதேவேளை ஏழாவது அமெரிக்க கடற்படை உயரதிகாரி ஒருவர் நேற்றுக் கொழும்பு வந்துள்ளார்.

# ராஜீவ்காந்தி கொலைவழக்கு செப்டம்பரில் விசாரணை

(சென்னை)

முன்னாள் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தியின் கொலை வழக்கில் சாட்சிகள் மீதான விசாரணை எதிர்வரும் செப்டம்பர் மாதம் சென்னை பூந்தமல்லி மறியற்சாலையில் உள்ள புதிய நீதிமன்றத்தில் ஆரம்பமாகும் என விசேட நீதிபதி எஸ். எம். சித்தீக் தெரிவித்துள்ளார்.

இவ்வழக்குகடந்த புதன்கிழமைசெங்கல்பட்டு மறியற்சாலையில் நடைபெற்ற பின்னர் நீதிபதியை நிருபர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த வாரம் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பமான விசாரணைகள் 12.30 மணிக்கு முடிவடைந்தபோது குற்றம்சாட்டப்பட்ட 26 பேரும் நீதிவான் முன் ஆஜர் படுத்தப்பட்டனர்.

குற்றப்பத்திரிகைகளின் பிரதிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டபோதும் பிரதிகளை தமிழில் மொழிபெயர்ந்து தர வேண்டுமென்று நளினியும் முருகனும் கேட்டுக்கொண்டனர். அதுபற்றி கவனிப்பதாக நீதிபதி தெரிவித்தார்.

குற்றப்பத்திரிகை முழுமையாக வழங்கப்படாதால் அவற்றை வழங்குவதற்கு எதிர்வரும் 15 ஆம் திகதி விசாரணை ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இவ் வழக்கை பாதுகாப்பாகவும், இரகசியமாகவும் விசாரிப்பதற்கென பூந்தமல்லி மறியற் சாலையில் 50 இலட்சம் ரூபா செலவில் புதிய நீதிமன்றம் கட்டப்பட்டு வருகிறது.

# புலிகள் இயக்கம் நசுக்கப்படவேண்டும்

**- ஜெயலலிதா**

(சென்னை)

புலிகள்இயக்கம் நசுக்கப்பட வேண்டும் என்று தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதா உள்ளூர்பத்திரிகைஒன்றுக்கு வழங்கியுள்ள பேட்டியில் கூறியுள்ளார். இலங்கையும், தமிழ்நாடும் ஒன்றுக்கொன்று மிக அருகில் இருப்பதால், புலிப்படையின்தமிழ்நாட்டின் அமைதிக்கும், சாந்திக்கும் அச்சுறுத்தலாகவே இருக்கும் புலிகள் செயற்படும் வரை தமிழ்நாட்டுக்கே ஆபத்தாகவே இருக்கும் என அந்தப் பேட்டியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆயிரம் கி. மீ. தூரமுள்ள கரையோரம் நெடுகிலும் கண்காணிப்புக்காக மத்தியஅரசின் ரிஷேர்வ் பொலிஸ் படையின் பத்துப் பிரிவுகள், தமிழ் நாட்டின் விசேடபொலிஸ், மற்ம்று ஆயுதந்தாங்கிய ரிஷேர்வ் பொலிஸ் படை, ஐந்து கப்பற் படைப் பிரிவுகள் 35 பொலிஸ் சோதனைச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இது நாட்டின் பொருளாதாரத்தில் பெரும் செலவை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலைமை இப்படியே தொடர்ந்து நீடிக்க முடியாதுஎன்றும்தமிழகமுதல்வர் செல்வி ஜெயலலிதா தெரிவிதுள்த்ளார்.

# கோவை மகேசனின் நினைவஞ்சலிக் கூட்டம்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் 'இனமான எழுத்தாளர்' கோவை மகேசனுக்கு நினைவஞ்சலிக் கூட்டமொன்றை வரும் சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பிற்பகல் 5-00 மணிக்கு நடத்தவுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக துணைப் பொறுப்பாளர் ஆ. தேவர் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

நினைவஞ்சலியுரைகளை சா. ஆ. தருமரத்தினம், ஐயா. சச்சிதானந்தம், பாமனிதர் எஸ். ரி. அரசு, க. சொக்கலிங்கம், தமிழ் மறவன், பொன் பூலோகசிங்கம், யோகரத்தினம் யோகி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

## கண்டெடுத்தோர் ஒப்படைக்கவும்

(யாழ்ப்பாணம்)

கிளாலியில் கறுப்பு நிறமுடைய மூன்று 'பாக்' தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் அதனை 'ஈழநாதம்' காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

## 18,841

...ழக் காவற்றுறையினர் பெருமளவு மண்ணெண்ணெயைக் கைப்பற்றி உள்ளனர். இவ்வாறு கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய் குடும்பம் ஒன்றிற்கு இரண்டு லீற்றர் வீதம் 18,841 குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தொடர்கையில்; பொதுமக்களால் தரப்படும் தகவல்களின் அடிப்படையில் தொடர்ந்தும் விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளில் தமிழீழக் காவல் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர். சமூக நலன் கருதி எடுக்கப்படும் இந்த நடவடிக்கைகளுக்கு சகல பொதுமக்களுக்கும்அவர்நன்றி தெரிவித்தார்.

அதேவேளை ஒருசில வர்த்தகர்கள் தாமாகவே முன்வந்து காவல்துறையின் உதவியுடன் மண்ணெண்ணெயை விநியோகித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருள்கள் எதனையும் எவ்விதத் தயக்கமுமின்றிவிநியோகிக்குமாறு சகல வர்த்தகர்களையும் அவர் கேட்டுக் கொண்டார்.

## அரசாங்கம்

மேற்பட்டது. அதேபோல் வை-8 விமானம் விழுந்ததும் பெரும் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தியது. இதைவிட பல டாங்கிகள், கவச வாகனங்கள், கடற்படைப் படகுகள் என்பனவும் புலிகளால் அழிக்கப்பட்டன. இதனால், இராணுவத்திற்கு ஏற்பட்ட செலவு பாரியதாகும்.

இந்நிலைமைகளின் காரணமாக அரசாங்கம் பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது.

## செட்டிகுளம்

அமைக்கப்படுவதாகவும் காவலரண்களில் உள்ள இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை சிங்களப் பகுதிகளுடன் தந்திரமாக இணைக்கப்பட்டுள்ள தந்திரி மலைப் பகுதியிலும் பெருமளவில் இராணுவத்தினர் குவிக்கப்படுவதாகவும், மன்னார் வீதி வழியே முன்னேறுவதற்கு இராணுவம் முயற்சிப்பதாகவும் நம்பப்படுகிறது.

இதேபோன்ற இராணுவ நடவடிக்கைகளை 1990 ஆம் ஆண்டு பிற்பகுதியிலும் 1991 ஆம் ஆண்டின் முற் பகுதியிலும் மேற்கொண்ட இராணு...

## வீரச்சாவு

முகத்துவாரம், மட்டக்களபபு) என்பவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.

## இரு

தனர்.

இவர்கள் இருவரும் வலிகாமம் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் என்றும் உறவினர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை பருத்தித்துறை கடற்பரப்பில் புலிகளின் படகு ஒன்று கடற்படையினரால்...

## புதிய

வருகிறது.

சுமார் முப்பது மணி நேரம் வரை நடைபெற்ற இத்துப் பாக்கிச்சமரில் சிறிலங்கா இராணுவத்தினருக்கு ஏற்பட்ட இழப்புகள் தெரியவில்லை.

## படுவான்கரை

திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளும்படி பரீட்சார்த்திகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர். பரீட்சை உத்தியோகத்தர்களையும் தத்தமது கடமைகள் தொடர்பாக தகவல்களைப் பெற்றுக் கொள்

## முயற்சிகள் எடுக்கப்படும்

### –பில் கிளிண்டன்அறிவிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவிற்கும், இந்தியாவிற்கும் இடையே உறவுகளைப் முந்திய பெருமை வாய்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல விரும்புவதாக ஜனநாயக் கட்சியின் சார்பில் அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் பில் கிலிண்டன் கூறியுள்ளார்.

வாஷிங்டனில் இந்திய சமுகத்தினர் அளித்த வரவேற்பு நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில்; அதிபர் கெனடியின் காலத்தில் நிலவிய நட்புறவு மீண்டும் நிலை நாட்டப்படும் என்றும், இந்தியாவிற்கு எதிராக புஷ் விதித்த வர்த்தகத் தடைகளுக்கு கண்டனமும் தெரிவித்தார்.

## விற்பனையாகிறது!

### வரதர் வெளியீடு

## அறிவுக்களஞ்சியம்

பொது அறிவை வளர்க்கும் நோக்குடையது. பல அறிஞர்களின் சிறு சிறு கட்டுரைகளுடன் முதலாவது இதழ் வெளிவந்துவிட்டது -இளைஞர்களுக்கான நான்கு போட்டிகளுமுள்ளன. விலைரூபா 10 - விற்பனையாளர்கள் தேவை. பாடசாலைகளில் விற்பனைசெய்யக்கூடியவர்கள் அதிபரின் அறிமுகக் கடிதத்துடன் நேரில் வந்து பிரதிகளைப் பெறலாம். விற்பனைக்கழிவுண்டு.

அறிவுக்களஞ்சியப்
ஆனந்தா அச்சகம்
226, காங்கேசன்துறைச் சாலை
யாழ்ப்பாணம்

(சி-4673)

## சுருவில் ஹரிஹர புத்திர ஐயனார் கோயில்

மேற்படி தேவஸ்தானத்தின் வருடாந்த உற்சவங்கள் 30-06-1992 இல் ஆரம்பமாகி நேற்று தேர்த் திருவிழாவும், இன்று தீர்த்த உற்சவமும் நிறைவெய்தி இருக்க வேண்டும். எனினும் இத் தேவஸ்தானத்தை சார்ந்த மக்களும், குருமாரும் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர வேண்டி ஏற்பட்டமையினால் உற்சவங்கள் நடைபெறவில்லை என்பதை நினைவு படுத்துவதோடு, எல்லாம் வல்ல ஹரிஹர புத்திர ஐயனாரின் நல்லாசிகளும், நல்லருளும் கிடைக்க வேண்டுமென பிரார்த்தனை செய்கின்றோம்.

ஆலயக் குருக்களும்,

[சி/4672] இடம்பெயர்ந்த சுருவில் மக்களும்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 9ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

### ஒருவாரத்திற்கு

நடத்துவதற்கு சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு ஆணைக்குழு ஒன்றை நியமித்திருந்தது தெரிந்ததே.

### சுடப்பட்ட

செய்திருந்தனர். இவர்களில் பிளைட் லெப்டினன்ட், ஏ.பி. டபிள் யு. பெர்னாண்டோ, பாதுகாப்புஇராஜாங்கஅமைச்சின் செயலாளர் வால்டர் பெர்னாண்டோவின் மகன் என்பதும், ஸ்குவார்டன் லீடர் காசீர் தான் இரண்டாம் ஈழப் போரில் கொல்லப்பட்ட விமானப்படை அதிகாரிகளில் தரத்தில் கூடியவருமாவார்.

### விமானப்படை

துள்ளமையால் படையினரின் நடவடிக்கைகள் பாதிக்கப்படுமா எனக் கேட்டபோது போரைத்தொடர்வதற்கு திடமாக இருப்பதாககருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தவிமானத்தின் பெறுமதி பற்றி உடனடியாக திட்டவட்டமாக கூறமுடியாத போதும் சுமார் பதினைந்து கோடி ரூபாவிற்கு அதிகமாக இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

### படுவான்கரை

சுற்றிவளைத்து தேடுதல் நடத்திய பின்னர் மயிலிப்போடி சந்திரன் (22, சின்ன முனைக்காடு)பொன்னர் உமாசிவம் (22, கொக்கட்டிச்சோலை) கிட்ணர்(குறிஞ்சாத்தீவு) ஆகிய மூவரையும் கைது செய்து முகாமிற்கு கொண்டு சென்றுள்ளனர். இச்சுற்றிவளைப்பு கடந்த ஞாயிறன்று இடம்பெற்றது.

### இறுதிவரை

ளது.

இது குறித்து பலாலி கட்டுப்பாட்டு நிலையம் கொழும்புக்கு அறிவித்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

விமானம் சரியாக 4.58 மணிக்கே விழுந்து நொருங்கி இருப்பதாகவும், விமானம் நொருங்கும் வரை விமானி பலாலி கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர்பு கொண்டு பேசிக் கொண்டிருந்ததாகவும், விமானக் கோளாறுகள் பற்றிய எந்தவிதமான தகவலும் தெரிவிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

### நோட்டம்

இதற்கிடையில் மாலை 4.45 மணியளவில் வந்த இலங்கை விமானப் படையின் வேவு விமானம் [சீ - பிளேன்] ஒன்றும் யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதிகளை நோட்டமிட்டுச்சென்றது.(பா

### மன்னார்

வருகின்றார்.

மேலும் இங்குள்ள வைத்தியசாலைகளுக்குத்தேவையான அளவு மருந்துகள் தரும்படி கேட்டால் கேட்கும் அளவின் பத்தில் ஒரு பங்கு அளவான மருந்துப் பொருள்களே அனுப்பி வைக்கப்படுகின்றது. இதனால் இம்மாவட்டத்தில் மருத்துவ சேவை மோசமான நிலையில் இருப்பதாகக் கூறப்படுகிறது. (க), (பா)

ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் மேற்கொண்ட இராணுவத்தினர் வவுனியா-மன்னார் பிரதான வீதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர எடுத்த முயற்சிகள் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டது இங்குகுறிப்பிடத்தக்கது.

### புலிகளின்

கோள் காட்டித் தெரிவிக்கின்றது.

இதேவேளை, புலிகளின் தாங்கி எதிர்ப்பு அணிபற்றி ஒப்பரேசன் சிக்சரின் போதே பிரஸ்தாபிக்கப்பட்டது. தற்பொழுது மீண்டும் இப்படையணிபற்றிப் பேசப்படுகின்றது

மேலும்புலிகளின் தலைமையினால் தாங்கிஎதிர்ப்பு யுத்தத்தில் நன்கு பயிற்சியளிக்கப்பட்டபோராளிகள் இந்தப் படையணியில் உள்ளனர் என இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலண்ட் பத்திரிகையால் வெளியிடப்பட்ட இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### இராணுவத்

கள் நடவடிக்கை செயலகப் பொறுப்பதிகாரி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, பாதுகாப்புச் செயலாளர் சிறில் ரணதுங்கா குறித்துப் பல கேள்வியையும் எழுப்பியுள்ளது.

லெப். ஜெனரல் சிசில் வைத்திய ரட்னாவின் தலைமையில் தரைப்படை இப்போது ஆனையிறவு யுத்தத்தில் வெற்றிகரமாகச் செயற்படுவதாகவும், இந் நிலையில் கூட்டுப்படை நடவடிக்கைச் செயலகப் பொறுப்பதிகாரி ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவும் மற்றும் ஜெனரல் சிறில் ரணதுங்காவும் தேவைதானா என்று ஒப்சேபர் பத்திரிகை கேட்டிருக்கிறது.

லெப். ஜெனரல் சிசில் வைத்தியரத்தனாவின் யுத்த முனை நடவடிக்கைகளையும் அப் பத்திரிகை புகழ்ந்துரைத்துள்ளது.

கடற்பரப்பில் புலிகளின் படகு ஒன்று கடற்படையினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை தாக்கி அழிக்கப்பட்டதாகவும் அதிலிருந்த இரண்டு புலிகள் கொல்லப்பட்டதாயும்இரண்டு புலிகள் தப்பிவிட்டார்கள்என வும் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஐலன்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (82,25)

ணுவத்தினருக்கு [illegible] இழப்புகள் தெரியவில்லை.

இதேவேளை இச் சமரைத் தொடர்ந்து டைக்காடு, ஆனையிறவுப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் முகாம்களிலிருந்து இயக்கச்சி பகுதியை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களைமேற்கொண்டவண்ணமிருந்தனர். (ச)

## மரண அறிவித்தல்

### மகேஸ்வரசர்மா (கோவை மகேசன்)

கோப்பாய் தெற்கு காலஞ்சென்ற இரத்தினசபாபதிக் குருக்களின் சிரேஷ்ட புதல்வனும், மயிலணி சிவகடாட்சக் குருக்களின் மருமகனும், விசாலாட்சியின் அன்புக் கணவருமாகிய மகேஸ்வரசர்மா (கோவை மகேசன்) 04 - 07 - 92 சனிக்கிழமை சென்னையில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் சென்னையில் நடைபெற்றன. ஏனைய கிரியைகள் கோப்பாயிலுள்ள அவரது இல்லத்தில் 13 - 07 - 92 முதல் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :

வீரபத்திரகோவில் சோ.இ.பிரணதார்த்திஷரக்குருக்கள்
கோப்பாய் (2780) (சகோதரன்)

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

### 08. 07. 1992

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம் 4780

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகனஇலக்கங்கள்:-

28-2104, 24-5958, 22-6746, 26-2108, 41-5605, 26-5491, 40-2829, 42-3964, 22-7011, 27-6704, 24-2496, 26-2745, 42-3732, 41-9997, 36-4678, 36-6822, 71-620, 24-6154, 24-6168, 26-9611, 26-2358, 26-561, 22-7097, 27-8754, 26-535, 42-3965, 24-3071, 24-9938, 28-4147, 26-3410, 36-5066, 36-3839, 25-4624, 71-9553.

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

42-1019, 26-4990, 26-3392, 40-2249, 42-9625, 26-2979, 40-2677, 24-5069, 27-9779, 42-9220, 36-4057, 42-1464, 26-6775, 41-9663, 24-9744, 27-5406, 25-7714, 25-7969, 25-4250, 36-2867.